884

போதனை விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்.

Editor & Publisher:

Rev. Fr. A. LOURDUSWAMI, B.A., L.T.,

R. C. Secondary Training School, Trichinopoly.

கொத்து 31 | 15 ஜனவரி 1941 | மலர் 7

...றை பாடசாலை, திருச்சினாப்பள்ளி.

தனிப்பிரதி அணா 1¼.

18 FEB 1941 MADRAS

BODHANA VISHAYA POONGOTHU

Magazine
of
Educational Topics & School Methods.

பொருளடக்கம்

		பக்கம்
1.	பத்திராதிபர் குறிப்புகள் ...	... 193
2.	புத்தாண்டு வாழ்த்து	... 194
3.	சென்னை கல்வி இலாகா திருத்த விதிகள்	... 195
4.	சுபாவ உணர்ச்சிகள் அல்லது உபஞ்ஞைகள்	... 197
5.	செய்யுட் சித்திரம் ...	... 200
6.	பெற்றோர் ஒத்துழைப்பு ...	... 202
7.	பாடக் குறிப்பு	... 205
8.	மண் புழு விடுத்த செய்தி ...	... 209
9.	விடுமுறை நாட்களை கழிக்கும் முறை ...	... 211
10.	நம் பாடசாலை நிகழ்ச்சிகள் ...	... 212
11.	யோசனாவிருத்திச் செய்யுள் விடைகள்	... 212
12.	கிராம முன்னேற்றம்	... 213
13.	சுவாமிகளின் சாதுரியம்... ...	... 214
14.	குட்டிக் கதை	... 215
15.	யோசனாவிருத்திச் செய்யுள்	... 216
16.	பதியம்போடுதலும், ஒட்டுவைத்தலும்	... 217
17.	திருச்சினாப்பள்ளி ரேஞ்சு ஆரம்ப ஆசிரியர் சங்கம் ...	218
18.	பாலர் ஸங்கீதம்	... 219

Imprimatur: ✠ JAMES,
Bishop of Trichinopoly.

Rates of Advertisement

PERIOD	HALF PAGE			FULL PAGE		
	Rs.	As.	Ps.	Rs.	As.	Ps.
1 Month	4	0	0	7	8	0
3 Months	11	0	0	20	0	0
6 Months	20	0	0	35	0	0
1 Year (11 Issues) ...	30	0	0	55	0	0

Editor & Publisher:
"BODHANA VISHAYA POONGOTHU" Trichinopoly.

ஏஜெண்டுகள் தேவை ! ஏஜெண்டுகள் தேவை !!

SUPERIOR
School Chalk Crayons!



BUY INDIAN ! BEST. QUALITY, DURABLE

SUPPORT INDIAN INDUSTRY ! SMOOTH & STRONG ! !

THE STANDARD CHALK CO.,

Old Post Office Road,
CANTONMENT, TRICHINOPOLY.

Suppliers of
White & Coloured Chalk Crayons.

PATRONISED BY
MANY HIGH SCHOOLS, COLLEGES
AND PUBLIC INSTITUTIONS.

A trial order will convince you.

Patronise Indian Industry.

போதனைக்குரிய புது உபகரணங்கள்

1. பாலர் வித்யாலீலைகள் ரூ. 10—0—0

100 வசன விளையாடல்கள் அடங்கியது; சிறுபதத்திலிருந்து தொடங்கி சிறு கதைகள்வரை இளைஞர் மௌனமாகவும் உற்சாகமுடனும் பொருளறிந்தும் வாசிக்கப் பழக்குதற்கு ஏற்றது; அழகிய பெரிய இரும்புப் பெட்டியில் அடங்கியது.

2. பாலர் கணித அட்டைகள் ரூ. 1—0—0

இதில் 1 முதல் 256 வரை எண்களும், கூட்டல் கழித்தல் அட்டைகளும், பெருக்கல் வகுத்தல் அட்டைத் துண்டுகளும் உள. அழகிய அட்டைப் பெட்டியில் அடங்கியது.

3. எண் காண் கருவி ரூ. 2—8—0

மரத்தால் ஆனது. அழகிய வர்ணப்பூச்சுடையது. 1 முதல் 10 வரை அறியவும், கூட்டவும் கழிக்கவும் போதிக்கவல்லது.

கிடைக்குமிடம்: JAYAM & Co.,
Publishers & Booksellers,
Nungambakkam, MADRAS.

சத்திய போதினி

ஒரு உயர்தர மாதாந்தர தமிழ் சஞ்சிகை

மாதிரி பிரதி இனும்

நானாவித விஷயங்கள்: தற்கால அரசியல் நிலை, வேத விஷயங்கள், சிறு கதைத் திரட்டுகள், உலக நவீனங்கள், சுகாதாரப் பகுதி, மாதர் பகுதி முதலியன அடங்கிய ஒரு மாத சஞ்சிகை.

சந்தா விவரம்

உள் நாடு	... ரூ.	1—0—0
வெளி நாடு	... ரூ.	1—6—0

விலாசம்:

சூப்பரின்டேன்டேண்டு,
சேயின்ட் ஜோசப்ஸ் இண்டஸ்டிரியல் ஸ்கூல் பிரஸ்,
திருச்சினப்பள்ளி.

போதனு விஷயப் பூங்கொத்து

கொத்து **31**] **15 ஜனவரி 1941** [மலர் **7**

பத்திராதிபர் குறிப்புகள்

We wish all our Subscribers and well-wishers a most Happy and Prosperous New Year.

எமது 'பூங்கொத்து" சந்தாதாரர்களுக்கும், அபிமானிகளுக்கும், ஏனைய பூங்கொத்து வாசக நேயர்களுக்கும் "பூங்கொத்துக்கு' விஷயதானம் புரிந்துவரும் அனைவர்க்கும் நமது மனமார்ந்த **புது வருஷ** வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்

இச்சந்தர்ப்பத்தில் நமது 'பூங்கொத்துக்கு' ஒழுங்காக சந்தா செலுத்திவருகின்றவர்களெல்லோர்க்கும் எமது நன்றியும் சந்தோஷமும் உரித்தாகுக ; சந்தா செலுத்தவேண்டியவர்கள் கூடியசீக்கிரம் தங்கள் சந்தாவைச் செலுத்தி 'பூங்கொத்தை' ஆதரிப்பார்களாக.

* * *

ஆரம்பப் பாடசாலைகளில் வேலை செய்யவேண்டிய நாட்கள் (Working days) : இதுவிஷயமாய், சென்ற அக்டோபர் மாதத்திய பூங்கொத்தில் பிரசுரித்திருப்பதைப்பற்றிய சிலரது சந்தேகத்தை நிவர்த்திசெய்வதின்பொருட்டு, இதனடியில் வருவதைக் கவனிக்கவும் :—

ஆரம்பப் பாடசாலைகளில் வேலை செய்யவேண்டிய பாடசாலை நாட்கள் **210** என்பது 1940-ம் வருஷத்திற்கு மாத்திரமே (For the Calendar Year 1940 only) செல்லுபடியாகும். இது

தலைமை ஆசிரியர்கள் இதனடியில் வரும் விதியை அனுசரிக்க வேண்டும்.

(Vide-Fort St. George Gazette Part I. B. pp 836. dated Nov. 26 '40.)

இத்தகைய பாடசாலைத் தலைமை ஆசிரியர் ஒவ்வொருவரும், சரியான காரணமின்றி முன் மாதத்தில் பாடசாலைக்கு வரத்தவறிப்போன மாணவர்களின் ஜாபிதா ஒன்றை, பிரதி மாதம் முதல் வாரத்துக்குள், 7-வது விதிப்படி நிறுவப்பட்டிருக்கும் கல்வி கமிட்டிக்கு அனுப்பிவிடவேண்டும்.

* * *

[Proceedings of the Director of Public Instruction, Madras. Dis. No. 5669/40-dated 5-12-1940, Communicating G. O. No. M.S. 2299-dated 2-12-1940.]

1940-ம் ௵ மார்ச்-மீ 5-ம் ௳ பிறந்த உத்தரவின்படி (G. O. 361) ப்ரைவேட் மானேஜ்மேண்டுக்கு உட்பட்ட ஆரம்பப் பாடசாலைகளுக்கு, பிரதி வருஷம் ஜனவரி மாதத்திலிருந்து தொடங்கி டிசம்பர் மாதத்தோடு முடியும் "காலண்டர் வருஷத்திற்கு" த்தான் (Calendar-Year) டீச்சிங் கிராண்டு (Teaching-Grant) கணக்கிடப்பட்டு வழங்கப்படும் என ஏற்பட்டிருக்கிறது.

எனவே, ஏப்ரல் தொடங்கி மார்ச் மாதத்தோடு முடிகின்ற ஆபீஸ் வருஷத்தில் (Financial-Year) கிராண்டுகள் வழங்கப்பட்டிருந்தாலும் அது அந்த காலண்டர் வருஷக் கணக்கின்படி தான் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும். அதன்படி 1939–40 ஆபீஸ் வருஷத்தில் கொடுக்கப்பட்ட கிராண்டும், அந்த காலண்டர் வருஷத்துக்குத்தான் ஏற்பட்டிருக்கவேண்டும். 1938-ம் வருஷத்திலும் அதற்குப் பிந்திய வருஷங்களிலும் ஏற்பட்ட பாடசாலைகளின் விஷயமாய் ஷை விதியின்படி காலண்டர் வருஷத்திற்குத்தான் கிராண்டு வழங்கப்பட்டுவருகிறது.

ஆனால் 1939–40 ஆபீஸ் வருஷத்தில்—(ஆபீஸ் வருஷம்) கொடுக்கப்பட்ட கிராண்டு விஷயமாய் (சில சங்கடங்கள் இருப்பதை நீக்கும்படியாக) அவ்வருஷத்தில் ஸர்க்காரால் அதிகமாகக் கொடுக்கப்பட்ட கிராண்டைத் திருப்பி வாங்காமல், தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது.

இனி 1940–41-ம் வருஷம் தொடங்கி, டீச்சிங் கிராண்டு அந்தந்தக் காலண்டர்வருஷக் கணக்கின்படியே வழங்கப்படும்.

சுபாவ உணர்ச்சிகள் அல்லது உபஞ்ஞைகள்

(Instincts)

(A. D. M. Prakasam, B.A., L.T.)

சுபாவ உணர்ச்சி (Instincts) என்பதைப்பற்றி அநேகவிதமான அபிப்ராய பேதங்களிருந்து வருகின்றன. சுபாவ உணர்ச்சியென்பது இயற்கைசக்தி அல்லது பரம்பரத்துவமாய் பெற்ற மனஅமைப்பு. இச்சுபாவ உணர்ச்சியையுடையவர்கள் ஒரு குறிப்பிட்டநிலையில் குறிப்பிட்டவிதமாய்ச் செய்கைகளைப் புரிவார்கள் இதுவே மேக்டுகல் (Mc Dougall) என்ற சிறந்த தத்துவசாஸ்திர நிபுணர் "சுபாவ உணர்ச்சி" என்பதைப்பற்றி கொடுக்கும் அர்த்தம்.

சுபாவ உணர்ச்சிகளை நாம் பயிற்றுவிக்கலாம். (We can educate instincts) இந்தச் சுபாவ உணர்ச்சிகள் பிராணிகளிடத்தும் காணப்படுகின்றன. ஆனால்-மனிதனிடத்தில் காணப்படும் சுபாவ உணர்ச்சிக்கும் மிருகங்களிடத்துக் காணப்படும் சுபாவ உணர்ச்சிக்கும் அதிக வித்யாசமுண்டு. மிருகங்களிடத்துத் தோன்றும் சுபாவ உணர்ச்சிகளைப் பயிற்றுவிக்க முடியாது. ஆனால் மானிடவர்க்கத்தினிடத்துக் காணப்படும் சுபாவ உணர்ச்சிகளைக் கல்வியின் மூலமாய் மாற்றலாம். உதாரணம் ஒன்றால் இதை விளக்கிக்காட்டலாம். ஒரு நாய்க்குப் போடப்பட்ட எலும்பையெடுத்தால், நாய்க்குக் கோபமுண்டாகி நம்மைக்கடிக்கலாம். அதே மாதிரியாக சிறுபிள்ளையிடமிருக்கும் விளையாட்டுக்கருவியான பொம்மையை யெடுப்போமாகில் குழந்தைக்குக் கோபம் மேலிடலாம். ஆனால் நாயினுடைய கோபம் காலாகாலத்துக்கும் மாறாமல் அது பெரியதாய் வளர்ந்துவிட்டாலுங்கூட அதற்குப் போடப்படும் எலும்புகளை யெடுப்போமாகில் கோபமுண்டாகிக் கடிக்கவரும். ஆனால் குழந்தையின் விஷயத்தில் இது இப்படியில்லை. குழந்தைக்குக் கொஞ்சம் வயதுவந்தவுடன் பொம்மையைவைத்து விளையாடும் சந்தர்ப்பமும் நீங்கிவிடுகிறது. அச்சந்தர்ப்பம் இருப்பினும் அது கோபங்கொள்ளாது. இக்குழந்தையின் கோபாவேசம் வேறு நற்றுறைகளில் செல்லுகின்றது. பழையகாலத்தில் தன் தேசத்தாருக்கு பிறதேசத்தாரால் இயற்றிய ஒரு குற்றம் பிள்ளையின் மனதைக் கோபத்துக்குள்ளாக்கி, பிறதேசத்தாருடன் கடும்போர் புரிய அவனைத் தயாராக்கலாம்.

மற்றும் இந்தச் சுவாதீன உணர்ச்சிகள் நிரந்தரமாய்க் காணப்படுவதில்லை. அறிவின் அடக்கியாளும் சக்தியால் இவைகள் அடக்கப்பட்டு விடுகின்றன. ஏனெனில் அநேக சுவாதீன உணர்ச்சிகள் நம்கூடவே பிறக்கிறதில்லை. இவை ஒன்றின் பின் ஒன்ருய் குழந்தைப் பருவம் தொட்டு குழந்தை வளர்ச்சி பெறும்வரை தோன்றிக்கொண்டே யிருக்கின்றன. உதாரணமாய் "பயம்" என்ற சுவாதீன உணர்ச்சி குழந்தைக்கு மூன்று வயது நடக்கும்போது தோன்றுகிறது. தன்னையொத்த கூட்டாளிகளுடன் சேர்ந்துகொண்டு விளையாடும் சுவாதீன உணர்ச்சி (Gang-Instinct) குழந்தையின் எட்டாவது வயதில் தோன்றுகிறது. "ஆண் பெண்" என்ற சுவாதீன உணர்ச்சி (Sex Instinct) பிள்ளையின் பன்னிரண்டாவது வயதில் தோன்றுகிறது என்றும் நாம் அறியவேண்டும். அறிவைக்கொண்டு இந்த சுவாதீன உணர்ச்சிகளைத் தகுந்தமாதிரி நல்வழியில் திருப்பலாம். சுவாதீன உணர்ச்சிகள் தாமதப்பட்டுத் தோன்றுமாயின் அவைகளைச் சுலபமாய் ஒழுங்குபடுத்தலாம். சுவாதீன உணர்ச்சிகள் நம் ஜீவியகாலம் முழுவதும் பிரதானமாய்க் காணப்படுவதில்லை. ஒரு பருவத்தில்தான் அதிக சக்தியுடன் தோன்றும். நல்லாசிரியர் இந்தப்பருவத்தைக் கவனித்து, மேற்சொன்ன சுபாவ உணர்ச்சியை விருத்தி செய்வாரேயானல் அதனல் அநேக பிரயோசனங்கள் ஏற்படக்கூடும். பிள்ளைகளின் சுபாவ உணர்ச்சிகளின் வழியாய்த்தான் ஆசிரியர் தாம் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்கவேண்டிய யாவற்றையும் கற்றுக்கொடுத்து, தாம் பிள்ளைகளிடமிருந்து பெறவேண்டிய வேலைகளனைத்தையும் அடையலாம். இப்படிச்செய்யாமற்போனல், ஆசிரியரின் மிகவும் சிறந்த போதனுமுறைகள்கூட பயனற்றதாய்ப் போய்விடும். கல்வி பயிற்றுவதில் முக்யமாய் நாம் கவனிக்கவேண்டியது, நாம் சொல்லிக்கொடுத்தவைகள் மாணவர் மனதில் பதிந்து அதன்படி அவர்கள் தக்கவித பதில் அல்லது செய்கையைச் செய்கின்றனராவென்பதே. (Reaction on the part of the pupils is an essential factor in the learning process). பிள்ளைகள் தக்கவிதமாய் நாம் சொல்லிக்கொடுத்ததைப் பிடித்துக்கொண்டு, தக்கபதில் அல்லது செய்கையைச் செய்யவேண்டுமென்று விரும்பும் ஆசிரியர் சுபாவ உணர்ச்சியைப்பற்றி அறிந்திருத்தல் மிகவும் அவசியம். பிள்ளைகளின் சுபாவ உணர்ச்சிக்கேற்றவாறு ஆசிரியர் போதித்து அவர்களின் உள்ளப்பற்றையும், எதிர்த்தாக்கத்தையும் (Reaction) பெறுதல் வேண்டும். (He should appeal to instincts to interest and to secure reaction).

நற்பழக்கங்களை, சுபாவ உணர்ச்சிகளின்மேல் அஸ்திவாரம் போல் கட்டி, சுபாவ உணர்ச்சிகளை ஸ்திரப்படுத்தலாம். (Instincts can be stabilised by building haults on them as foundation). தண்டனைமூலமாயும் சுபாவ உணர்ச்சிகளை உபயோகிக்காமலிருப்பதின்மூலமாயும், அவைகளுக்குப்பதிலாய் வேறொன்றைக் கொடுப்பதின்மூலமாயும், சுபாவ உணர்ச்சிகளை அடியோடு தீர்த்துவிடவோ, மாற்றவோ, சுத்திபண்ணவோ, திருத்தவோ கூடும்.

சுபாவ உணர்ச்சிகள் பலவகைப்படும். இவற்றில் மிகவும் முக்யமான சுபாவ உணர்ச்சிகளாவன:—

பெற்றோர்க்குரிய சுபாவ உணர்ச்சி.

இனத்தோடு சேர்ந்திருக்கும் சுபாவ உணர்ச்சி.

கோபம் என்ற சுபாவ உணர்ச்சி.

நூதன அற்புத ஆராய்ச்சியென்ற சுவாதீன உணர்ச்சி.

பார்த்ததைப்போல நடிக்கும் சுபாவ உணர்ச்சி.

சிருஷ்டிபாவனை உணர்ச்சி.

விளையாட்டு சுபாவ உணர்ச்சி.

பயம், என்ற சுபாவ உணர்ச்சி.

பிரபோதம் என்ற சுப்ாவ உணர்ச்சி.

மேற்கூறிய சுபாவ உணர்ச்சிகளில் ஒவ்வொன்றைப் பற்றியும், பிரதிமாதம் வெளிவரும் பூங்கொத்தில், கட்டுரை எழுதப் படும்.

(5-வது படிக்கும் தன் மகன் மாணிக்கத்தைப் பார்த்து)

தகப்பன்: டேய் மாணிக்கம், நாளைக்கு நீ பிறந்த திருநாளாச்சே உனக்கு என்னடா வேண்டும்?

மாணிக்கம்: அப்பா, திருச்சினுப்பள்ளியிலே "போதனு விஷயப் பூங்கொத்து"ன்னு இருக்கிறதே, அது இந்த வருஷம் வேணும் அப்பா. அது 1 ரூபாய்தானும் அப்பா.

D. James.

செய்யுட் சித்திரம்

(M. A. S. Udayar, Tamil Pundit.)

உலகம்போற்றும் உயர்நிலைத்தாய அலகில் வான்புகழ் அமைவுறவடைதலே ஒப்பகன்றுள் விரிந்தோங்கிய கேள்வித் தப்பகன்றுயர்ந்த சான்றோர் குறியாம்.

அத்தகைய மாண்பினர்தம் சொல்லும் செயலும் நினைவும் எவ்வகையினும் அழிவுறுவண்ணம் நின்று நிலவுவதாகும். ஏனெனில் அவை இம்மையுமறுமையுமிறுதியில் இன்பமும் செம்மையினளித்துத் திறம்படுதகவுடைத்தாதலான். அத்தகைய பெரியார்காணுங் காட்சிகள் ஒவ்வொன்றும் அவர்கள் உள்ளத்தை விட்டகல்வனவல்ல. அவற்றைத் தாம் கண்டவாறு பிறர்க்கு அழகுற எழுதிக்காட்டும் அவர்தம் நாவாகிய சித்திரக் கருவி செய்யுளாந்திரையில் விழும்போது அது ஓர் ஒப்பற்ற இயற்கைச் சித்திரமாய்ப் பலவகை வண்ணங்களோடு திகழ்கின்றது. இனிமேற் கூறப்பட்ட செவ்விகளனைத்தும் ஒருங்கமைந்த சித்திரம் ஒன்றை ஈண்டு எடுத்து ஆராய்வாம்.

இயற்கையை இயற்கையினுணர்ந்து இயற்கைத் தன்மை கெடாது எழுதியுணர்த்தும் இயற்கை, இயற்புலவர் தமக்கே இயற்கையினமைந்துளது. எனவே இயற்புலவர் பெருமானொருவர் இயற்கை வளனெலாம் ஒருசேர நின்று நிலவும் எழிற்கா ஒன்றைக்காணுகின்றார். அக் கா அவருக்குக் காவாகமட்டும் விளங்கவில்லை. அவர் கண்ணுக்குப் பல வேறு பொருள்களாகக் காட்சியளிக்கின்றது.

காலை நேரம் கதிரவன் குணபால் எழுந்தும் அவன் வெம்மை பூமியிற் பரவாவண்ணம் இளமுகிற் கூட்டங்கள் மறைகின்றன. வசந்த காலத்தில் எழுந்த தென்றலின் தண்மை இயற்கையின் எழிலைப் பன்மடங்காகப் பெருக்குகின்றது. தருக்களெல்லாம் தளிர்த்து பசந்து இடைவெளியின்றிச் செறிந்து விளங்குகின்றது. பச்சிளந் தளிர்களினிடையே பானிறமலர்கள் பண்புற மலர்ந்து சிறியனவும் பெரியனவுமாய்த் திகழ்கின்றன. காவின் பரப்போ கட்புலனுக்கடங்காது பரந்து விளங்குகின்றது.

இத்தகைய பொழில் கவிஞர் கண்ணுக்குப் பொழிலாக தோன்றிற்றில்லை. நள்ளிரவிற்றோன்றும் நிர்மலமான வான் வெளியாகக் காணப்படுகின்றது. உடனே புலவர் மனத்தில் ஓர்கணம் மற்றோர் உணர்ச்சி தோன்றுகின்றது. அதுதான்

இதுவானெனனின் எல்லையற்றிலங்கும் பல்லுடுக்கணங்கள் வில்லுமிழ்ந்திலகவேண்டுமன்றே என்பது. அடுத்த கணத்தில் ஊன்றி நோக்குகிருர். அதே கணத்தில் அகமும் முகமும் மலர அகன்ற விழிகள் பிரகாசமடைகின்றன. செய்மையிற்றோன்றும் சோலையினது நீலத் தோற்றமும் இடை இடையே செறிந்து விளங்கும் வெண்மலரீட்டமும் நீலத்திரையிற்றோன்றும் வானுமுடுவுமாக விளங்குகின்றது. அத்தோற்றத்தை அவர் சித்திரித்த செய்யுட்டிரையிற் கண்டு மகிழ்வோம்.

"நீனிரைத் தெழுதிய படத்தினேருடு
மேனிரைத் தெழுதிய விசும்பின்றோற்றமோ
கானிரைத்தெழுந்தளிர் காழகத்துயர்
தேனிரைத் தவிழ்மலர் திளைத்த சோலையே."

இதன் பொழிப்பு:—

இளந் தருக்களிடைத் தளிர்த்த பசுந்தளிர்களிடையிடையே தோன்றி மலர்ந்த வெண்மலர்கள் நிறைந்த சோலைகள் நீல நிறமாகிய படத்தின்மேல் எழுதிய உடுக்களின்றோற்றம் நீல நிறமாகிய விசும்பிடை உடுக்கள் நிறைந்து விளங்குவனபோன்றன என்பது. இதில் சோலையின் வெளித்தோற்றத்தை நீல நிறத் திரையாகவும், காவிடை மலர்ந்த மலர்களைத் திரையிடைத் தோன்றுவித்த உடுவின்றோற்றமாகவும் எழுதிய சித்திரத்தையும் பிற சித்திரங்களையும், தேம்பாவணியெனும் சித்திரச்சாலையுட் புகுந்து கண்டுமகிழ்வாம்.

மரண அறிக்கை

எமது போதனுமுறைப் பாடசாலையில் எலிமெண்டரி ஹையர் கிரேடில் 1939-ம் வருடத்தில் சேர்ந்து போதனைப் பயிற்சி பெற்றுவந்த எமது ஹையர் ஸீனியர் மாணவர் N. A. பங்கராஸ் என்பவர், சென்ற 9-12-'40 திங்கட்கிழமை மாலை, நிமோனியா ஜுரத்தால் பீடிக்கப்பட்டு பரலோகப்ராப்தி அடைந்துவிட்டனர். இந்தத் துக்கத்துக்குரிய செய்தியை நாம் மிக விசனத்துடன் தெரிவிப்பதுடன் அன்னவரது ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுவோமாக.

பெற்ருேர் ஒத்துழைப்பு

(J. Jesuadian Cardoza, *Sec. Gr.*)

"தந்தை மகற் காற்றும் நன்றி அவையத்து
முந்தியிருப்பச் செயல்"

என்பது முதுமொழி. இதன் பொருள் யாதெனில், அறிவாளர் கூடிய சபையின்கண் தன் மைந்தனை முதன்மைஸ்தானம் வகிக்க ஏதுவான நிலைமையைப் பெறும்படி செய்வதே தந்தையின் கடமையாகும். அதாவது பாலர்களுக்குக் கல்வியைப் புகட்டுவிப்பதே இதன் சீரிய கருத்தாகும். இத்தகைய நோக்கத்தை எல்லாப் பெற்ருேர்களும் கடைப்பிடிக்கின்றனரா வென்றும், கடைப்பிடித்தாலும் சரிவரச் செய்கின்றனரா வென்றும் வினுவின் ஐயத்திற்கிடமேயாகும். இதற்குக் காரணம் பெற்ருேர்கள் கல்வியின் கனகனத்தை நன்கு உணராததால் அதைப்பற்றிய சிந்தனையே கொள்ளாது, தங்கள் மைந்தரையும் அறிவின்மையிலேயே வளரும்படியான பரிதாப நிலைக்குக் கொணர்ந்து விடுகின்றனர். நம் பாரத மக்கள் இந் நாகரீக காலத்திலும் நூற்றுக்கு எட்டுப்பேரே கற்றனராயிருக்கின்றனரென்பதற்கு இதுவும் ஓர் காரணம் என்பதில் சந்தேகமின்று.

எவ்வாறு உடலின் நலனைக்கோரி உடலைச்சார்ந்த அங்கங்கள் ஒத்துழைக்கின்றனவோ அங்ஙனமே கல்வியாகிய கலனைக் கோரி ஆசிரியரும், அவரடியிற் சார்ந்த மாணவர்களும், மாணவர்களை ஈன்ற பெற்ருேர்களும், ஒத்துழைக்கவேண்டும்.

பெற்ருேர்கள் எங்ஙனம் பள்ளியில் பயிற்றுவிக்கும் கல்வியின் சார்பாய் சம்பந்தப்பட்டிருக்கின்றனரென்ருல் மாணவர்கள் ஆசிரியரின் அடியில், பள்ளியில் ஏறக்குறைய 5 அல்லது $5\frac{1}{2}$ மணி நேரமே இருக்கின்றனர். எஞ்சிய நேரம் யாவும் வீட்டிலேயே செலவிடுகின்றனர். ஆதலின், அவர்களின்பால் கவலை எடுத்துக் கொள்ளவேண்டிய கடமை, ஆசிரியர்களைவிட, பெற்ருேர்களின் மீதே அதிகமாக ஏற்றப்படுகின்றது. சில பெற்ருேர்கள் பள்ளியில் தங்கள் பிள்ளைகளைச் சேர்த்தகாலையிலேயே, தங்களின் அலுவல்கள் யாவும் முடிந்துவிட்டதென்றும், பிள்ளைகளின் சகலவிதமான பொறுப்புகளையும் ஆசிரியரே கவனிக்க வேண்டும் என்றும், தப்பெண்ணம் கொண்டிருக்கின்றனர்.

இனி எங்ஙனம் பெற்ருேர்கள் பாடசாலைக் கல்வியின் விஷயமாய் ஒத்துழைக்கலாம் என்பதைச் சற்று ஆராய்வோம். பிள்ளைகளைப் பெற்ருேர்கள் பள்ளியில் சேர்த்துவிட்டு வாளா யிருத்தல் தகாது. கல்வியைப்பெற்றுப் பலனடைய நாடோ றும் பள்ளிக்குச் செல்கின்ருர்களா என்றும், சென்ருலும் போகின்ற வழிகளிலே கெட்டபிள்ளைகளோடு சேர்ந்து நாளைக் கழித்துவிட்டு நல்லபிள்ளைகள்போல் சாப்பிடச் சரியான நேரத் தில் வந்து, போனவர்களைப்போல் பாசாங்கு செய்கின்றனரா வென்றும் கவனித்தல் கடமையாகும். இதனுலன்ருே சரியான வகையில், கிரமமாகப் பள்ளி சென்று பயிலாததால் கல்வியின் பிரயோஜனத்தை இழந்து, தேர்ச்சிபெற மார்க்கமின்றி, மாணவர்கள் தேக்கத்திற்கும் (Stagnation) காரணமாகின்றது. இன்னமும் பெற்ருேர்கள் கல்வியின் நோக்கம் என்ன என்பதை உணர்ந்து, மாணவர்களின் குணநலன் விஷயமாகக் கெட்டவர்க ளுடன் உறவாடி கெட்டுப்போகாமலும், உடல்நலன் விஷயமாகத் தேகாப்பியாசங்களுக்கும் விளையாட்டுகளுக்கும் ஒழுங்காகச் சென்று அநுசரிக்கின்றனராவென்று கவனித்தும், அவ்விதமாக அவர்களை அனுஷ்டிக்கச் செய்தும் ஆசிரியர்களுக்கு இவ்வித மான உதவிபுரிதலவசியம். மாணவர்கள் பள்ளியைவிட்டு வரும்போது வீட்டப்பியாசங்களைச் செய்துவரும்படி ஆசிரியர்கள் கொடுத்தலுண்டு. அவ்வப்பியாசங்களைப் பிள்ளை கள் சரிவரச் செய்கின்றனராவென்றும், செய்கையில் சந்தேகங் களிருந்தால் அவர்களுக்கு அவசியமான விஷயங்களில் உதவி செய்யவும் கடமைப்பட்டிருக்கின்ருர்கள். ஆனுல் கல்விவாசனை யறியாத பெற்ருேர்களோ கல்வியின் கண்யத்தை உணராததா லும், வீட்டப்பியாசம் கொடுத்தகாரணம் அறியாமையினுலும், தங்களின் வேலைகளுக்கு அவர்கள் தேவையாயிருத்தலாலும், ஆசிரியர்களின்மேல் வெறுப்புக்கொள்கின்றனர். பின் தங்களின் பிள்ளைகளின் கல்வி விஷயமாய் ஆசிரியர்களுடன் சம்பாஷணை செய்து ஆசிரியர்களைப் பிள்ளைகளது கல்வியில் உற்சாகமூட்டி, வேண்டிய உதவிபுரிதல் உசிதமாகும். இவ்விதமாகப் பற்பல கருமங்களிலும் பெற்ருேர்கள் தங்கள் மைந்தர்களின் கல்வி விஷயமாக ஒத்துழைத்தல் அவசியம். அல்லாவிடின் "ஒற் றுமையில்லாக் குடும்பம் ஒருமிக்கக் கெடும்" என்ற பழ மொழிக்கு இலக்காகும்.

இனி ஆசிரியர்கள் எங்ஙனம் பெற்ருேர் ஒத்துழைப்பைப் பெறலாம் என்பதைச் சற்று கவனிப்போம். பல்வித வழிக

ளுண்டு. முதன்மையாகப் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை பள்ளியிற்சேர்க்கையில் அவர்களின் பெற்றோர்கள் கொண்டு வந்தாலன்றி தலைமையாசிரியர் சேர்த்தல் கூடாது. ஏனெனில் பெற்றோர்கள் வந்து சேர்த்தால் ஆசிரியர் சிறிது நேரமாவது அவருடன் உறவாடி அவரது அன்பைப் பெறலாம். இரண்டாவதாக மாணவர்களின் தேர்ச்சியைப்பற்றி பெற்றோர்களுக்கு பத்திரங்கள் அனுப்பி வைத்து அவர்களுடன் மிகுந்த அன்னியோன்னியமாய் இருத்தல் வேண்டும். அங்ஙனம் செய்வாராயின் பெற்றோர்களும் மிகுந்த கவலை எடுக்க ஏற்ற சாதனமாகும். பெற்றோர்களை ஏதாவது ஓர் நாளில் பள்ளிக்கு வரவழைத்துப் பிள்ளைகள் எங்ஙனம் வேலைகள் செய்கின்றனரென்றும் ஆசிரியர்கள் எவ்வித உற்சாகமாய் வேலை புரிகின்றனரென்றும் கவனிக்கச் செய்யவேண்டும். முக்கியமாகச் சுற்றுப்பிரயாணங்களுக்குப் பிள்ளைகளுக்கு அனுமதி அளிக்கவும் பள்ளியில் நடைபெறும் பெற்றோர்சங்கம், பரிசளிப்புவிழா, இன்னமும் சகலவித வைபவங்களுக்கும் பெற்றோர்களை வரவழைத்துக் கல்வியின் நோக்கத்தையும் அதன் அவசியத்தையும் எடுத்துப் புகட்ட வேண்டும். அங்ஙனம் செய்வாராயின் நமது இந்தியாவில் கல்வி செழித்தோங்கி உயர் நிலைமை பெற்று "ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்" என நமது பாரதத்தாயும் "ஈத்துவக்கும்" இன்பம் எய்துவள் என்பதில் ஐயமின்று.

சப் இன்ஸ்பெக்டர்: டேய் திருட்டுப்பயலே என்னடா நீ எப்போப்பார்த்தாலும் திருடுகிறாயாமே. உனக்கு ஏண்டா இந்தப் புத்தி?

திருடன்: எசமானே, நான் என்னங்க செய்வேன், "ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்" என்று அந்தப் புலவன் பாடியிருக்கிறானே.

D. James.

பாடக் குறிப்பு

(V. Savaridoss)

வகுப்பு: V.   பாடம்: சுகாதாரம்.   நேரம்: 30 நிமிஷம்.

நோக்கம்: நாம் சுகஜீவிகளாயும், சந்தோஷமுள்ளவர்களாயும் வாழ்வதற்கு அடிப்படையாயுள்ள சுகாதாரத்தை மாணவர்களுக்கு நன்கு ஊட்டி அவர்கள் வாழ்க்கையையும் செம்மைப்படுத்தும்வண்ணம் சுகாதாரப் பகுதியில் சமூக சுகாதாரமும் நமது கடமைகளும் என்பதைப் போதித்தல்.

உபகரணங்கள்: 1. கிராமக் கிணறு அல்லது குளத்தை அசுத்தம் செய்வதை விளக்கும் படம். 2. சுகாதாரப் பாதுகாப்பில்லாத கடைகள் அல்லது தட்டில் வைத்து விற்கும் திண்பண்டங்கள் இவற்றில் ஈ மொய்ப்பதை விளக்கும் படம். 3. வியாதியஸ்தனின் மலம், எச்சில் முதலியவற்றிலிருந்து கிருமிகள் பறந்து வியாதி பரவுவதை விளக்கும் படம்.

விஷயம்	முறை
பீடிகை:—நோயற்ற வாழ்வே குறையற்ற செல்வம், சுத்தமே சுகம் தரும். ஆதலால் தேக உறுப்புக்கள், உடை இவற்றைச் சுத்தமாய் வைத்துக்கொள்வதுமன்றி சுற்றுப்புறத்தையும் சுத்தமாய் வைத்துக்கொள்ளவேண்டும். அனுதினமும் ஒருதடவையாவது உடலை நன்ருய்த் தேய்த்துக் குளிக்கவேண்டும். காலையில் எழுந்து பற்களைத் துலக்கி, முகம் கை கால்களைக் கழுவவும் நகக்கண்களில் உள்ள அழுக்குகளை அகற்றவும் வேண்டும். நமது உடைகளையும் சுத்தமாய் வைத்துக்கொள்வதன்றி வகுப்பு அறை, வீடு, தோட்டம், விளையாட்டிடம் இவைகளையும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். இன்னும் இதர சுகாதாரப்	குறையற்ற செல்வம் நோயற்ற வாழ்வென்றும், நோயின்றி வாழ, சுத்தம் அவசியமென்றும், எவ்வெவ் வழிகளில் சுத்தத்தை அனுசரிப்பதென்றும் வினக்கள் மூலம் வருவித்து, பின்னர் சில சிறு உதாரணங்கள் மூலம் சுகாதாரத்திற்கு ஆதாரமான பழக்க வழக்கங்களாகிய, குறிப்பிட்ட நேரத்தில் படுக்கையை விட்டெழுதல், சாப்பிடுதல், தூங்குதல் முதலியவற்றை அனுசரிப்பது அத்தியாவசியமென வருவித்தல்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
182455

விஷயம்	முறை
பழக்க வழக்கங்களையும் செவ்வனே அனுசரித்தால் சுகமாய் வாழலாம்.	

நோக்க வெளியீடு :—நாம் சுகமாய் வாழ்ந்தால்மட்டும் போதாது, நமது அயலார்களும் சுகமாய் வாழவேண்டுமென்று வருவித்து, இப்பொழுது பொதுஜன அல்லது சமூக சுகாதாரமும் நமது கடமைகளும் என்பதைப்பற்றிப் பார்ப்போம் என்று வெளியிடல்.

புதிய பாடம் :—

விஷயம்	முறை
1. ஒவ்வொருவரும் தற்சுகத்தைமட்டும் காத்துக்கொண்டால் போதாது. பொதுஜன சுகத்தையும் கவனிக்கவேண்டும்.	நாம் சுகமாய் வாழ்வதற்கு சுத்தம், சுகாதாரப் பழக்க வழக்கங்கள் இவற்றை ஞாபகமூட்டி பொது இடமாகிய வீட்டின் சுற்றுப்புறத்தையும், தெருக்களையும் சுத்தமாக வைத்துக்கொள்வது நமது கடமையாகுமெனக் கேட்டு "விஷயத்தை" வருவிக்கவும்.
2. முதலில் வீட்டைச்சுற்றிலும் குப்பை செத்தைகளைப் போடக்கூடாது. தெரு எல்லோருக்கும் பொதுவாயிருப்பதால் அதில் குப்பைகளை எறிந்தால் காற்றடிக்கும்போது நமது வீடுகளுக்குத்தான் வந்துசேரும். ஆகவே குப்பைத்தொட்டிகளில் அல்லது அவற்றிற்குக் குறிக்கப்பட்ட இடங்களில் அவற்றைச் சேர்க்கவேண்டும்.	
3. கோவில், குளம், சாவடி முதலிய இடங்களை நாம் அசுத்தம் செய்யக்கூடாது. பிறர் செய்யாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும்.	ஊர் உற்சவ காலங்களில் கிராம ஜனங்களால் பொதுஜன சுகாதாரம் வெகுவாய்ப் பாதிக்கப்படுகிறதென்று வருவித்தும், குழிக்கக்கூஸ் ஏற்படுத்துவதைப்பற்றி விளக்கவும்.
4. கண்ட இடங்களிலெல்லாம் மலஜலம் கழிப்பதுகூடாது. இதனால் ஊருக்குப் பெரும் தீங்கு விளைகிறது. கக்கூசுகளையே உபயோகிக்கவேண்டும்.	

விஷயம்	முறை
5. குடிப்பதற்காக உள்ள கிராமக் கிணறு, குளம் இவற்றின் ஜலத்தை அசுத்தப்படுத்தக் கூடாது. குளங்களில் மாடு குளிப்பாட்டுவது, பாத்திரங்கள் தேய்ப்பது, துணிகள் கசக்குவது, குளிப்பது, கால் கழுவிக் கொள்ளுதல் முதலியவைகளைச் செய்து குடி ஜலத்தை அசுத்தப் படுத்துவது கூடாது.	சில கிராமங்களில் குடிநீர் நிலைகள் எவ்வாறு உபயோகிக்கப்பட்டு வருகின்றன என்பதை அனுபவத்தைக்கொண்டும் படத்தின் மூலமும் வருவித்து விஷயத்தில் கண்டவைகளை வருவித்தல்.
6. மிட்டாய், வடை முதலிய தின்பண்டங்களை, ஈ, கொசு அவற்றின்மேல் உட்காராமல் வலைக்கூட்டால் அல்லது கண்ணுடி மூடியால் மூடி பந்தோபஸ்தாய் வைக்காவிடில் வியாதிகள் பரவுவதற்கு அது அஸ்திவாரமாயிருக்கும். ஆதலால் சுகாதார முறைப்படி விற்கப்படாத பண்டங்களைப் புசிக்கலாகாது.	வலைப்பெட்டி, கண்ணுடிப் பெட்டி இவற்றின் படங்களைக் காண்பித்து சுகாதார முறைப்படி தயாரிக்கவும் விற்கவும்படாத தின்பண்டங்களை வாங்கிப் புசிக்கும் குழந்தைகள் நோய்வாய்ப்பட்டு வருந்த நேரிடுமென்று வருவித்து விளக்கவும்.
7. அம்மை, பேதி, க்ஷயம் முதலிய தொத்து வியாதிகள் அந்தந்த நோயாளிகளிடமிருந்து மற்றவர்களுக்குப் பரவக்கூடியது. நோயாளிகள் இவ்விஷயத்தில் சற்று எச்சரிக்கையாயிருத்தல் நலம்.	சில தொத்துவியாதிகளின் பெயரை வருவித்தல். மூன்றாவது படத்தைக் காண்பித்து அவ்வியாதியஸ்தரை அணுகியவர்களையும் அது பாதிக்குமென வருவித்து, விளக்கவும். பின்னர், தொத்துவியாதிகள் பரவும் விதத்தையும் அதைத் தடுக்கும் உபாயங்களையும்பற்றிக் கூறவும்.
8. நோயாளியின் எச்சில், மலம், மூத்திரம் இவற்றால் ஆகாயமும், ஜலமும் அசுத்தப்படும். ஈக்களும் ஷெ வியாதிகளைப் பரவச்செய்யும். ஆகவே நாம் சுகாதார விதிகளை அனுசரிக்க வேண்டும். இஃதோடு நின்று	

விஷயம்	முறை
விடாமல் சுகாதார இலாக்கா அதிகாரிகளுடன் ஒத்துழைத்து ஊருக்கு க்ஷேமத்தை உண்டு பண்ண உதவுவது நமது கடமை யாகும்.	

பரீக்ஷை வினுக்கள்

1. சமூக சுகாதாரமென்பதற்குப் பொருளென்ன?
2. ஊர்ப் பொது இடங்கள் எவை? அவை எவ்வாறு அசுத்தமடைகின்றன?
3. ஊர் உற்சவகாலங்களில் சமூக சுகாதாரத்திற்குப் பங்கம் நேரிடாமல் எவ்வாறு பாதுகாக்கலாம்?
4. எப்பேர்ப்பட்ட குடிநீர் நிலைகளால் கிராம ஜனங்களுக்குத் தீங்கு நேரிடுகிறது? அதை எவ்வாறு தடுப்பது?
5. தின்பண்டம் தயாரிப்பவர்கள் விற்பவர்கள் எவ்வாறு சமூகசுகத்தைக் காக்கலாம்?
6. பொதுஜன சுகத்தைப் பெருக்க நோயாளி எவ்விதத்தில் உதவியாயிருக்கலாம்?

க. ப. சு.

பொதுஜன சுகாதாரமே சமூக சுகாதார மெனப்படும். தெருக்கள், கோவில்கள், சாவடிமுதலியன ஊர்ப் பொது இடங்கள். ஒவ்வொருவரும் தெருக்கள் முதலிய இடங்களில் குப்பை கூளங்களைக் கண்டவிடங்களில் எறிவதாலும் மல ஜலம் கழிப்பதாலும் பொது இடங்கள் அசுத்தமடைகின்றன.

உற்சவ காலங்களில் கக்கூசுகள் ஏற்படுத்தியும், தொண்டர்களை நியமித்துத் தெரியாத ஜனங்களுக்கு ஒழுங்குகளைச் சொல்லியும் சுகாதாரம் பாதிக்காவண்ணம் செய்யலாம்.

குடிநீர் நிலைகளில் அசுத்தம் செய்யாமலிருக்க வேண்டும். தெரியாதவர்களுக்குத் தீமைகளை எடுத்தோதவேண்டும்.

கடைக்காரர்கள் தின்பண்டங்களை சுகாதார முறைப்படி தயாரித்து விற்பதால் சுகாதாரத்தை விருத்திசெய்யலாம்.

நோயாளிகளின் மூலமாய் நோய் பிறருக்குப் பரவாவண்ணம் பார்த்துக் கொள்வதால் சமூக சுகம் வளர ஏதுவாகும்.

மண் புழு விடுத்த செய்தி

(T. S. G.)

நான் ஒரு விசித்திரமான பிராணி. மிருகமல்ல; பறவையல்ல; மீனினமுமல்ல; பாம்பினமுமல்ல. பூச்சியைப்போன்றும் யான் இருக்கவில்லை. எனினும் என் இனத்தார்க்கு முதுகு எலும்பு இல்லாத முக்கிய காரணத்தால் பூச்சி இனத்தில் தாழ்ந்த அந்தஸ்தில் வைத்திருக்கின்றனர். கேவலம் புழு! ஆயினும், இதைக்குறித்து நான் வருந்தவில்லை. ஏனெனில், மெய்யாகவே எங்களைக் காட்டிலும் உயர்ந்த இனத்தாரைப் போல் கண், காது, மூக்கு, கை, கால், வயிறு முதலிய வெளி அவயவங்கள் ஒன்றுமே என் இனத்தாருக்குக் கிடையாது.

அன்றியும், எங்களில், ஆண்பாலர், பெண்பாலர் என்ற பாகுபாடு இல்லை. ஒருவரே ஆணாகவும், பெண்ணாகவும் (Hermophrodites) இருப்போம். இந்த விபரீதத்தால் எங்களைக் கேவலமாகக் கருதுவீர்களானால் அதற்காக நாங்கள் வருந்துவதற்கில்லை. மேலும், எங்கள் இனத்தில் சிலர் துஷ்டர்கள் மக்களுக்குத் தீங்கிழைப்பவர்கள் உளர். அவர்கள் ஜலத்தில் வசிப்பவர்கள். அங்கு முட்டையிட்டு விருத்தியடைபவர்கள். அவர்களில் ஒரு சாரார் மனிதர்களின் குடலுக்குள் எப்படியோ புகுந்துவிடுகின்றனர். அவர்களது உணவையுண்டு, குடல் நோய்களையுண்டாக்கி அவர்களை இளைக்கச்செய்து, தாம் கொழுத்து வளர்ந்து, முட்டையிட்டு இன விருத்திசெய்து வாழ்கின்றனர். இத்தகைய துஷ்டர்களை யார் தான் விரும்புவர்?

ஆனால் நாங்கள் நிலத்தில் மண்ணில் வசிப்பவர்கள். எங்களை மண் புழுவென்றும், நிலப்புழுவென்றும் (Earth-worm) கூறுவீர்கள். உங்களிற் சிலர் எங்களை மண்ணுளிப் பாம்பு என்றுகூட கூசாமல் கூறிவிடுகிறீர்கள்! பாம்பைப்போல் எங்கள் தேகம் உருண்டு நீண்டிருப்பதைத் தவிர, வேறு எந்த விதத்திலாவது பாம்பை ஒத்திருக்கிறோமா? விஷப்பற்களோ வேறு எம்மாதிரியான பற்களோ எங்களுக்கில்லை. வேண்டுமானால் உங்கள் பாடசாலைத் தோட்டத்தில் தோண்டி, எங்களைப் பிடித்துப் பார்ப்பீர்களானால் நாங்கள் எவ்விதத் தீங்கற்ற ஜந்துக்கள் என்பதை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெள்ளிதின் கண்டு தெளிவீர்கள். தோட்டத்தில் வசித்தபோதிலும் நாங்கள் செடிகளுக்கு யாதொரு தீமையும் புரிவதில்லை.

நன்மைதான் புரிவோம். மண்ணில் கலந்துள்ள மட்கின இலை, தழை முதலிய தாவரப் பொருளை மண்ணுடன் உண்டு, பின் வெளியாக்குவோம். அந்த எரு சிறந்த எரு என்பதை நீங்கள் அறியவேண்டும். மேலும் நிலத்தினுள் அங்குமிங்கும் சஞ்சரிக்கும்போது அதைக்கிண்டிக் கிளறி, உழுவதுபோல் ஆக்கி விடுகிறோம். இதனால் காற்று, வெளிச்சம், தண்ணீர் தாராளமாய் உட்செல்ல ஏதுவாகிறது. ஏற்கனவே நீங்கள் எவ்வளவுதான் முதலில் உழுதிருந்தபோதிலும், நாங்கள் உள்ளிருந்து இம்மாதிரி அடிக்கடி உழுது வருகின்றமையால்தான் செடி, கொடிகள் சுகமாய் வளர்கின்றனவென்பதைத் திட்டமாய்த் தெரிந்துகொள்ளுங்கள். இவ்வாறு கிருஷிகர்களுக்கு எவ்வித உதவிபுரிகின்றோமென்பதை உபாத்தியாயர்களாகிய நீங்கள் உணர்ந்து பிரசுரப்படுத்துவீர்களானால் மக்கள் எங்களைக் கேவலமாக எண்ணமாட்டார்கள் என்பது என் திண்ணமான எண்ணம்.

சில சமயங்கள் சிலர் எங்களை விரோதிகளெனப் பாவித்து, நிலத்தை வெட்டும்போது எங்களையும் வெட்டி எறிந்துவிடுகின்றனர். அவ்வாறு வெட்டுண்டு துண்டிக்கப்பட்டாலும், சாகாமல், ஒவ்வொரு துண்டமும் ஒரு ஜீவப்பிராணியாக வளர்ந்து விடுவோம் என்பதையவர்கள் அறியார்போலும். ஏன் தெரியுமா? எல்லாம் மக்களுக்காக உழைக்கவே! நாங்கள் மண்ணிலேயே முட்டையிட்டு, இன விருத்தியாகி, மண்ணையுண்டு, வளர்ந்து, மண்ணில் மடிந்து, கிருஷிகர்களுக்காகப் பாடுபட்டுழைக்கும் எங்களை நீங்கள் ஏன் நன்கு மதிக்கக்கூடாதெனக் கேட்கிறேன்?

எங்களுக்கு விரோதிகளோ பலர். இதனால் பகலில் வெளிவருவதில்லை. எங்கள் சஞ்சாரம் எல்லாம் இரவிலேதான். கண், காது, மூக்கு, நாக்கு முதலிய உறுப்புகள் இல்லாவிடினும் எங்கள் சர்மத்தின் (மேல்தோல்) மூலமாய் சகல உணர்ச்சிகளையும் உணர்ந்து, இருட்டிலும், ஈரத்திலும் உழன்று மண்ணைத் தின்று ஜீவித்து மக்களுக்காகப் பரித்தியாகமும் பேருபகாரமும் புரிந்து வருகின்ற எங்களினத்தினரை நீங்கள் இனிமேலாகவாவது இகழ்ச்சியாகக் கருதாமல், மகிழ்ச்சியுடன், புகழ்ச்சியுடன் போற்றுவீர்கள் என நம்புகின்றேன்.

விடுமுறை நாட்களைக் கழிக்கும் முறை

(D. Ignatius, *H. G.*)

மாணவர்களுக்கு ஒரே தொடர்ச்சியாகச் சில மாதம் வரையில் படிப்பிலேயே கவனத்தையும், காலத்தையும் செலவழிக்கும் மனதிற்கும், மூளைக்கும், தேகத்திற்கும் ஓய்வு கொடுப்பதற்கென விடப்படும் நாட்களே விடுமுறைநாட்களாகும். ஓயாது இயங்கும் இயந்திரங்களை இடையிடையில் ஆறவிடுதல் போன்றது நமக்கேற்படும் இவ்வோய்வு. இந்நாளில் தொழிலே செய்யாமலிருக்க வேண்டும் என்றர்த்தமில்லை. வேலை நாள்களுக்கும் விடுமுறை நாட்களுக்கும் பேதம் யாதெனில் வேலை காலத்தில் கால அட்டவணைக்குத் தகுந்தாற்போல் அந்தந்தத் தொழிலைச் செய்யவேண்டும். ஆனால் ஓய்வு நாளில் நம்முடைய இஷ்டத்திற்கு இசைந்த வேலையை செய்யலாம்.

இளைஞர்கள் விடுமுறை காலத்தில் நாடோறும், வெளியே உலாவுதல், படகு தள்ளுதல், கால்பந்து (Foot ball) கைபந்து (Volley ball) விளையாடுதல் முதலிய வழியில் தம் பொழுதைப் போக்கலாம்.

ரஜாநாட்களில் மாணவர்கள் தங்கள் புத்தகங்களை அடியோடு மறந்துவிடுகின்றனர். அதுவும் தீதே. படித்தபழையபாடங்களை மறுபடியும் பார்ப்பதால் மறதியேற்படாமல் புதியபாடங்களைத் தொடர்ந்து கற்றுக்கொள்ளுவதற்கு வசதியுண்டாகும். இந்நேரங்களில் புத்தியை விருத்தி செய்வதற்கு "நல்ல கதை புஸ்தகங்கள் சரித்திரங்கள் முதலிய நல்ல நூல்களைப் படித்தறிவது நலம்." தங்களுடைய கிராமங்களிலோ, நகரங்களிலோ இருக்கும் நூல் நிலையங்களுக்குச் சென்று அறிவை விருத்திசெய்யலாம். பள்ளிக்கூடநாளில் இவ்விதம் ஒழிந்தநேரங்கள் அகப்படா? "ஆயிரம் பொன் கொடுத்தாலும் காலத்தைத் திரும்பி அடைய முடியாது" என்று பெரியோர் சொல்லியிருக்கின்றனர். ஒருவர் ஒரு பாடத்தில் தேர்ச்சி குறைவாய் இருந்தால் அக்குறையைப் போக்கிக்கொள்ள இந்நேரத்தைச் செலவிடலாம்.

சிலர் தம் சுற்றத்தார் இருக்கும் ஊர்களுக்குச் சென்று அவர்களோடு அளவளாவிக் காலம் போக்குதலும் நலம். சரித்திர சம்பந்தமான இடங்களுக்கும், பொருள்காட்சி அமைந்

துள்ள பிரதேசங்களுக்கும், சுகத்திற்கு வசதியான இடங்களுக்கும் சென்று அறிவை விஸ்தாரப் படுத்தலாம்.

இறுதியாக, இவ்வாறு காலத்தைச் செலவிடுவோமானல் மீண்டும் பள்ளிக்கூடம் தொழில்சாலை முதலியதில் சென்று வேலை செய்யும்போது கஷ்டந் தோன்ருது.

நம் பாடசாலை நிகழ்ச்சிகள்

2-12-'40, 4-12-'40, 6-12-'40 இத்தேதிகளில் எமது பாடசாலையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் 'ரேடியோ' (Our School Radio) மூலமாய்க் கல்வி சம்பந்தமான விஷயங்கள், ஆடல், பாடல், பேச்சுகள் முதலியன நிகழலாயின.

7-12-'40 முதல் 11-12-'40 முடிய அரை வருஷப் பரீட்சை (Half Yearly Examination). ஷை பரீட்சை முடிந்தவுடன் ஆசிரியர்கள், மாணவர்கள், மாதிரிப் பாடசாலைப் பிள்ளைகள் ஆகியவர்கள் சபாமண்டபத்தில் (Assembly Hall) ஒருங்கு கூடினர். சங். தலைமை ஆசிரியரவர்கள் "கிறிஸ்துமஸ்" விடுமுறை நாட்களில் அனைவரும் செய்யவேண்டிய கடமைகளைப் பற்றியும், விசேஷமாய் மாணவர்களும், பிள்ளைகளும் சற்று இளைப்பாறிக்கொள்வது நன்மை பயக்கவல்லது எனினும், படிப்பை மறக்கலாகாதென்றும், குறைவாயுள்ள பாடங்களில் தேர்ச்சி பெறும்வண்ணம் சற்று உழைத்துவரவேண்டிய அவசியத்தைப்பற்றியும், இன்னும் இக்காலத்தில் ஒழுக்கம் சீர்கெட்டுப் போகாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும் என்பனபோன்ற அரிய புத்திமதிகளை எடுத்துக்கூறி, ஆசிகூறவே பாடசாலை கலைந்தது.

யோசனுவிருத்திச் செய்யுளின் விடைகள்

(கொத்து 31, மலர் 6, 175-ம் பக்கம் பார்க்க.)

1. சீப்பு.
2. தேங்காய்.

கிராம முன்னேற்றம்

பத்துக்கற்பனைகள்

(S. Koil Pillai Joshua, *Old Student*)

1. உன் பிள்ளைகள் சம்பிரமமாயும், உன் வெள்ளாண்மை செழிப்பாயும் உண்டாகும்படி ஆறு அடி ஆழமான குழிகள் தோண்டி உன் குப்பை கூளங்களை அவைகளினுள் புதைப்பாயாக.

2. சிசுக்களை நன்றாய்ப் பரிபாலிக்கவும்; சிறந்த இல்லாளாக நடந்துகொள்ளவும்; உன் சிறு பெண்மக்களைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவாயாக.

3. உன் சம்பாத்தியத்தை வீண் செலவுகளிலும், மதுபானத்திலும், வெள்ளி, பொன்னுபரணங்களிலும், ஆடம்பர உடைகளிலும் செலவிட்டு வீண் கடனுக்குள்ளாகாதிருப்பாயாக.

4. எல்லாப் பிள்ளைகட்கும் அம்மை குத்திக்கொண்டு, உன்னையும் உன் குடும்பத்தையும் சகலவித பிணியினின்றும் நீக்கிக்கொள்ள முயற்சிப்பாயாக.

5. உன் வீடுகளில் எல்லா அறைகட்கும் ஜன்னல்கள் வைப்பாயாக. உன் முற்றத்தில் புஷ்பச் செடிகளை உண்டாக்குவாயாக.

6. உன் கொல்லைகளை பந்தோபஸ்துபண்ணி நல்ல ஜலமுள்ள தோட்டங்களில் கிணறுகள் வெட்டுவாயாக.

7. மரஞ்செடிகளை நாசமாக்காதிருப்பாயாக; நல்ல வித்தைத் தெரிந்தெடுத்து விதைப்பாயாக; உன் வெள்ளாண்மைப் பூச்சிகளை அதம்பண்ணுவாயாக.

8. சோம்பலாய் இராமல் உன் வீட்டின் வாழ்வையும், குடும்ப சந்தோஷத்தையும், வயல்களின் விளைச்சல்களையும், கிராமத்தின் முன்னேற்றத்தையும் கருதி இராப்பகலாய் உழைப்பாயாக.

9. கிராம கூட்டுறவு சங்கங்களில் சேர்ந்து உலக சமாச்சாரங்களை வாசித்து, புஸ்தகங்களையும் மற்றும் நூல்களையும் கற்றுப் புத்திமானாகப் பிரயாசிப்பாயாக.

10. கிராமங்களில் "சாரணீயத்தை" நிறுவிப் பிள்ளைகளைச் சாரணர் இயக்கத்தில் ஈடுபடச் செய்வாயாக.

சுவாமிகளின் சாதுரியம்

(Thomas J. Jesuadian, S. G.)

சுவாமி விவேகானந்தரின் சாதுரியமான கதைகள் பல உண்டு. அவைகளில் நான் சொல்லப்போவதும் ஒன்று.

ஒருநாள் சுவாமி விவேகானந்தர் புகை வண்டியில் இரண்டாவது வகுப்பில் பிரயாணம் செய்துகொண்டிருந்தார். கூட்டமோ அபரிமிதம். உட்காரவோ இடமில்லை. இவர் ஒரு வண்டியில் ஏறும்பொழுது ஒரு ஆங்கிலேயர் இருந்தார். இவர் தன்னுடைய பெட்டியை ஒரு ஆசனத்தில் வைத்துவிட்டு ஒரு சீட்டில் அவர் காலை நீட்டிப் படுத்துக்கொண்டிருந்தார்.

சுவாமிகள் ஏறியதும் தான் உட்காரும் பொருட்டு ஆங்கிலேயரிடம் சென்று "பெட்டியை எடுங்கள். நான் உட்காரவேண்டும்" என்றார். அதற்கு ஆங்கிலேயர் "அந்தப் பெட்டி என்னுடையதல்ல. அதன் சொந்தக்காரர் இப்பொழுதுதான் வெளியே போனார்" என்று பொய் சொன்னார். இதையறிந்த சுவாமிகள் அந்தப் பெட்டியைத் தன் மடிமேல் எடுத்து வைத்துக்கொண்டு பெட்டியிருந்த இடத்தில் உட்கார்ந்துகொண்டார். உடனே ஆங்கிலேயர் "அவர் இப்போது வருவார். வேறு இடத்தில் உட்கார்ந்து கொள்ளுங்கள்" என்றார். சுவாமிகள் மறுமொழியாக "அவர் வந்தவுடன் நான் எழுந்துபோய் விடுகிறேன்" என்று சொல்லி உட்கார்ந்திருந்தார்.

இவ்வாறிருக்க வண்டி நகர்ந்தது. எவரும் வரவில்லை. ஆங்கிலேயர் சொல்வதறியாது விழித்தார். சுவாமிகள் எழுந்து பெட்டியை எடுத்து ஜன்னல் பக்கமாக பிளாட்பாரத்தில் வீசிவிட்டார். உடனே ஆங்கிலேயர் கோபாவேசத்தோடு எழுந்து "பெட்டியை ஏன் வெளியே வீசினீர்கள்" என்றார்.

உடனே சுவாமிகள் சாதுரியமாக கோபப்படக் காரணமில்லையே. அப்பெட்டி உங்களுடையதில்லையல்லவா? அப்பெட்டியின் சொந்தக்காரர் வெளியே நின்று விட்டார். திரும்பி வரவேயில்லை. பெட்டியில்லாமல் கஷ்டப்படுவார் என்று பிளாட்பாரத்தில் எறிந்தேன் என்று சாந்தமாகப் பதிலளித்தார்.

குட்டிக் கதை

மாமரத்துப் பேய்

(A. Nargunam)

"என்னுங்க சாமி, ஒங்க பையன் பள்ளிக்கூடத்துக்கு போவும்போதும் வரும்போதும் ஒரு கல்லாவது விட்டு எறியாமல் போவ மாட்டேங்கிறுன். அவனுக்கு காவல் காக்கிறதே பெரிய வேலையாயிருக்குதுங்க" என்று குத்தகைக்காரக் குப்பன் சங்கர முதலியாரிடம் முறையிட்டுக்கொண்டான்.

"சரி, நான் கவனிக்கிறேன்," என்று சமாதானம் சொல்லி அனுப்பிவிட்டு, முதலியார் ஆபீசுக்குப் போகத் தயாராயிருந்தார். இந்த ரங்குப் பயலுக்கு என்ன வழி பண்ணினுல் சரிபடும் என்று அவருக்கு ஒன்றும் விளங்கவில்லை.

அந்த சமயத்தில் ரங்கு வெளியிலிருந்து விளையாடிவிட்டு வீட்டினுள் நுழைந்தான் அவசரமாக.

"டேய், ரங்கு உனக்கு எத்தனை தரம் சொன்னுலும் மூளையில் ஏறுவதில்லையே? இனிமேல் நீ அந்த மாமரத்து வழியாய் போகக்கூடாது. அதிலே ஒரு பெரிய பேய் இருக்கிறதென்று இப்பொழுதுதான் குப்பன் வந்து சொல்லிவிட்டுப் போனுன். ஜாக்ரதை!" என்று சொல்லிவிட்டு முதலியார் ஆபீசுக்குப் போய்விட்டார்.

ரங்கு முகத்தில் குறும்புத்தனம் தாண்டவமாடிற்று! நேரே, அம்மாவிடம் ஓடி, "ஏன் அம்மா? பேய் எப்படி அம்மா இருக்கும்?" என்று வெகு அக்கரையாகக் கேட்டான்.

அவள் தமாஷாக, "கருப்பாயிருக்கும், ஆளைக் கண்டால் வாள், ஊள், என்று கத்தும், மரத்திலிருந்தால் கிளைகளெல்லாம், கிடு, கிடு வென்று ஆடும்," என்று சொல்லி பரிகாசமாக சிரித்தாள். ரங்கு கவனமாகக் கேட்டுக்கொண்டு, பள்ளிக்கூடம் போய்விட்டான்.

மாலை ஆறு மணிக்கு முதலியார் ஆபீசிலிருந்து வீட்டுக்கு வந்துகொண்டு இருந்தார். அந்த மாமரத்து அடியில் வந்ததும், ஒரே "ஆ, ஊ" என்ற இரைச்சல்! கிளைகள், கட கடவென்று குலுக்கப்பட்டன!! அவருக்கு ஆச்சரியத்தை விளைவித்தது என்னவென்றுல், அதில் ரங்கு சப்தம்தான் பலமாய் கேட்டது!!

"டேய், ரங்கு, இறங்குடா, கீழே! திருட்டுப்பயலே, என்றார் முதலியார். சப்தமெல்லாம் 'கப் சிப்' என்று நின்று விட்டது. ஒரு தாழ்ந்த கிளையிலிருந்து, ரங்கு 'தொப்' என்று குதித்து முதலியாரின் கழுத்தை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு கொஞ்சி பசப்ப ஆரம்பித்தான். இதற்குள் அநேக பிள்ளைகள், தொப், தொப்பென்று குதித்து மூலைக்கொருவனாய் ஓடிப்போய்விட்டார்கள்!

"வாடா! பயலே!" என்று ரங்குவைப் பிடித்து வீட்டுக்கு இழுத்து வந்தார் முதலியார்.

வீட்டினுள் நுழைந்ததுதான், "அம்மா, நம்ப அப்பா, பேய்க்கு கொஞ்சம்கூட பயப்படமாட்டாங்க போலிருக்குது அம்மா!" என்றான் ரங்கு வெகு பட படப்பாக!!

யோசனைவிருத்திச் செய்யுள்

(G. Susaimanickam, H. M.)

St. Stephen's Ele. School, Achangulam.

ஐந்தெழுத்தைப் பொருளாக் கடுத்தகுறை,
நீக்குவோ னென்றர்த்தமாம்;
ஐந்தில் ஆதியிரண்டைச் சேர்க்க,
அரிய தோர் வாழ்த்துதல் என்றாகும்;
ஐந்திலாதியும் கடையிரண்டையும் நீக்க,
ஆகும் புன்முறுவலன்றோ!;
ஐந்திலாதியும் கடையிரண்டையும் சேர்க்க,
கழனியில் காவல் புரிவோராகும்;
ஐந்திலாதிக் கடுத்தொன்றை நீக்கின்,
ஆதியிலிந்தியாவிற்கு வந்தவர்களாகும்;
ஐந்தெழுத்தையும் அமைவுட னாய்ந்து,
அம்மலரில் செய்யுளினால் அறைவீர்தானே!

பதியம்போடுதலும் ஒட்டுவைத்தலும்

(S. E. Arul Raj, *Higher Grade*)

நம் தோட்டத்தில் பலவித பூச்செடிகளையும் குரோட்டன்ஸ் வகைச் செடிகளையும், பழவர்க்கச் செடிகளையும், காய் கனிச் செடிகளையும் பதியம்போடுதலாலும், ஒட்டுவைத்தலாலும் நல்ல பலனை அடையவும் தோட்டத்தை அலங்கரிக்கவும் செய்யலாம்.

விதைகள் மூலியமாயும் கொடிகள் மூலமாயும் செடிகளை வளர்க்கலாம். (உ-ம்.) பசளி, மயிர்மாணிக்கம், ரெங்கூன் கிரீப்பர், கொடிரோஸ் முதலியன. பால்ஸம் ஜீனியா, மேரிகோல்ட், பட்டாபிஷேகம் முதலியன செடிகளில் குச்சிகளை வெட்டி நட்டுவைத்து விருத்திசெய்யப்படும்.

பதியம் வைத்தல்:—அநேகவிதமான குரோட்டன்ஸ் செடியை சிறு குச்சிகளாக வெட்டி நடலாம். சாதாரணமாக ஒரு சிறு குச்சி பதியம்போடவேண்டுமென்றால் 6 அங். முதல் 8 அங். வரை எடுக்கவேண்டியது. இது போதுமானது. இப்படி வெட்டுவது சரிவாய் இருப்பது நல்லது. சிலர் அக்குச்சிகளைக் கெட்டியான சாணிப்பாலில் நனைத்து நடுவதுமுண்டு. மண் மிருதுவாயிருத்தல்வேண்டும். இப்படி நட்டு மூளைப்பதற்குத் திரைச்சாணம் ஏற்றது. வேர்விட்டவுடன் தொட்டியில் எடுத்துவைக்கவேண்டும். ஈரம் போகாதபடி பார்க்கவேண்டும்.

ரோஜா:—ரோஜாச் செடியைப் பதியம்போடுவது பின்வருமாறு.—செடியின் ஒரு கொப்பை வளைத்து, வளைந்திருக்கும் கொப்பின் கீழ்பாகத்தில் பாதி நறுக்கி அதனுள் கல்செருகி வளைத்து தொட்டியில் வைத்து மேலே மண் போடவேண்டும். நல்ல மண் போட்டு, குச்சி மண்ணைவிட்டு வெளிவராது பார்க்கவேண்டும். 1 மாதம் சென்று செடிப்பாகத்தை சிறிது வெட்டவேண்டும். பின் சிறிது நாளாக நாளாக அப்பாகம் பூராவையும் வெட்டிவிட்டுத் தொட்டியைத் தனியே எடுக்கவேண்டியதுதான்.

அலரி, மல்லிகை, சேவந்தி:—இச்செடிகளின் கொப்புகளை வளைத்து பூமியில் அல்லது தயாரித்த தொட்டிகளில் வைத்து கொப்பு மேலே வராதபடி நல்ல மண்போட்டு தண்ணீர் விடவும். 1 மாதத்திற்குப்பின், செடிப்பாகம் உள்ள கொப்பை சிறிது சிறிதாக வெட்டவேண்டும். பின் தயாரிக்கப்பட்ட தொட்டியை வேண்டிய இடத்திற்குக் கொண்டுபோகலாம்.

(தொடரும்.)

திருச்சினுப்பள்ளி ரேஞ்சு ஆரம்ப ஆசிரியர்கள் சங்கம்

(S. S. Srinivasa Aiyangar Secretary)

முதல் இரண்டு சங்க ஸெண்டர்களின் கூட்டம்

1940-ம் ௵ நவம்பர்-மீ 9-ம் ௳ பிற்பகல் 1-30-க்கு திருச்சி ஸர்க்கார் போதனுமுறைப் பாடசாலையில் ஸ்ரீ E. V. கோபாலய்யர், B.A., L.T., (Senior Deputy Inspector of School) அவர்களது தலைமையின் கீழ் ஷை சங்கக்கூட்டம் நடைபெற்றது. கடவுள் வணக்கம் பாடல் முடிந்ததும், காரிய தரிசியால் முன் மாதத்திய ரிப்போர்ட்டு வாசிக்கப்பட்டது.

பின்னர், திருச்சி ஜில்லா ஆசிரியர் சங்கத்தின் பொன் விழா (Golden Jubilee) காரியதரிசி ஸ்ரீ S. T. ராமானுஜம் அய்யங்கார், B.A., L.T., அவர்கள், 19-12-'40 முதல் 21-12-'40 வரை நடைபெறும் பொன் விழாவைப்பற்றியும் அந்தக் கொண்டாட்டத்தில் பின்வரும் விஷயங்களில் ஆசிரியர்கள் ஒத்துழைக்கவேண்டியதைப்பற்றியும் விஸ்தரித்தனர்:—

(1) கல்வி பொருள்காட்சி. (2) உபந்நியாசப் போட்டி. (3) வியாசப்போட்டி. (4) பாடசாலை வகுப்பறைப் பிரச்னைகள் போன்ற விஷய ஆராய்ச்சிகள் முதலியன. அன்றியும் நல்ல கட்டுரைகளுக்கு நற்சாக்ஷிப்பத்திரங்கள் அளிக்கப்படும் என்று கூறி முடித்தனர்.

திருச்சினுப்பள்ளி R. C. போதனுமுறைப் பாடசாலை உடற் பயிற்சி ஆசிரியர் (Physical Director) ஸ்ரீ V. M. Joseph அவர்களால் இயற்றப்பட்டுள்ள உடற்பயிற்சி நூல்—இரண்டு பாகங்கள் ஆசிரியர்கட்கு இன்றியமையாததென்றும், அதனை அனைவரும் பெற்றுப் பயன் எய்துமாறும் தெரியப்படுத்தப்பட்டது. பின்பு கணித பாட சம்பந்தமான விஷயங்களைப்பற்றி அங்கத்தினர் எடுத்துப்பேசியவுடன் அக்கிராசனர் ஸர்க்கார் சுற்றறிக்கைகளைப்பற்றியும், முதல் ஜாக்கிரதை விதிகளை ஆசிரியர்கள் அறிந்துகொள்ளவேண்டியதைப்பற்றியும் கூறி முடிக்கவே, வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

பாலர் ஸங்கீதம்

A. Gnanadickam, *Music Teacher*,
St. Joseph's Higher Elementary School, Ootacamund.

4, 5-ம் வகுப்புகள்

வேளாண்மைத் தொழில்

கண்ணிகள்

இந்துஸ்தான் காபி 22. ஆதி தாளம்.

1. நல்தொழில்தான் பயிர் செய்தொழில் காண்
நாட்டிலெங்கும் சீர்சிறக்கும் வேளாண்மை செய்வோர்
தம் வீட்டிலும்சு கம்பிறக்கும் ஆளாண்மையுண்டு
அதை நேரில் நாம் கண்டு

2. தொழும் அடிமை தொழில் பழுதும் உண்டு
தொன்று தொட்டு நம் முன்னோர்கள் சீரடைந்தார்கள்
ஏரை இன்று மறந்ததால் மக்கள் துன்ப வறுமை
சூழப் பட்டார் சிறுமை.

3. காட்டும் சுகவழி கூட்டும் இகம்
பாட்டன்காலம் நல்லபலன் ஊட்டினநிலம்
முப் பாட்டனைப்போல் கஷ்டப்படாவிடில் வருமோ ?
நிலம் பலன் தருமோ ?

4. நீரைக்கட்டி நிலம் ஊறியபின்
ஏரில் மாட்டைப்பூட்டி ஓட்ட மண்ணும் எளிதாய்
தண் ணீரில்சேர்ந்து சேறுண்டாகி மிருதுவாகும்
நிலம் புளுதி யாகும்.

5. உழும் நிலத்தால் வரும் பலன் அதிகம்
நாலு ஐந்து சால்திருப்ப நன்றாய் மண்ணில் ஏர்
கூர் காலிறங்கி ஆழஉழும் கீழ்மண் மேல்வரும்
பயிர் வேணளவுண்ணும்.

6. உரமிடுவர் நிலத் திறமறிந்து
ஏற்ற எருவாக தழை கூளங்கள் சேர்த்து
மாட்டுக் கோட்டிலிட படுக்கைமேல் கோஜலம் மலம்
பட்டு ஊறும் நேர்த்தியாய்

7. சேதமில்லா நிதஞ் சேர்த்து எல்லாம்
ஆழப் பள்ளந் தோண்டி கொட்டி ஆறியும்போகா
கொஞ்சம் மேலும் மண்ணால் மூட சிலநாளைக்குள் மக்கி
ஆகும் தக்க எருவாம்

ஸாரிம காகரி ஸாரிஸரீகா ஸாஸா
நல்தொழில் தான்பயிர் செய்..தொழில் காண்.

பா,பபாபா பபபப பமபத மா†கஸ
நா,ட்டிலெங்கும் சீர்சிறக்கும் வேளாண்மைசெய் வோர்தம்.

†கா,†க†காஸா †க†க†கஸ ரிஸரி†க ஸாஸஸ
வீ,ட்டிலும்சு கம்பிறக்கும் ஆளாண்மையுண் டுஅதை

ரிஸ ரிக ஸா;
நேரில் நாம்கண் டு;

இவ்விதமே மற்ற எல்லா அடிகளையும் பாடக் கற்பிக்கலாம்.

குறிப்பு:—† அந்தரகாந்தாரம்.

ஜான்: டேய் இந்தா என் போட்டோப் படம். நான் செத்துப்போய்விட்டாலும் இதை என் ஞாபகமாக வைத்துக் கொள்ளடா.

சுப்பன்: சரிடா, நீ சீக்கிரம் சாகும்படி எங்கச் சாமிக்கு 1½ தேங்காய் உடைக்கிறேண்டா. சீக்கிரம் நீ செத்தால்தாண்டா உன் போட்டோ உபயோகம்.

D. James.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
182455

தென்னிந்திய கத்தோலிக்குப் பத்திரிகைகளின் பிரச்சார சங்க ஸ்தாபன முயற்சி

கிறீஸ்துவ சபையோர்களே, கத்தோலிக்கு சேவா சங்கங்களே, நமது மத்தியில் உலாவிவரும் கத்தோலிக்குப் பத்திரிகைகளை நமது குடும்பங்களினிடையே ஏராளமாய்ப் பரவச்செய்வதற்கும் அதினின்று ஒரு தினசரிப் பதிப்பை வெளியிடவும் ஆவலுள்ள சகோதரர்கள் பலர் எதிர்பார்த்ததுபோல் பல சங்கங்களும் இதற்காக உழைத்துவந்ததற்குப் பிரதிபலனாக யாவரும் ஒன்றித்து ஊக்கமும் உற்சாகமும்கொண்டு பத்திரிகாபிவிருத்தியைப் பெருகச்செய்வது தங்களது முதற் கடமையெனப் பாவித்து இச்சேவைக்கும் உடன்படுவோமாக. இதற்காகத் தென்னிந்தியாவெங்குமுள்ள மேற்றிராசனங்கள் ஒவ்வொன்றிலும் பத்துப்பேர்களடங்கிய ஒரு கமிட்டியை ஏற்படுத்தி கமிட்டியாளர் கத்தோலிக்குப் பத்திரிகைகளின் பிரச்சார சங்கமென்பதாக ஸ்தாபகம் செய்து ஷ சங்கத்திற்கு மேற்றிராணிமார்களையோ குருமார்களையோ அல்லது கிறீஸ்துவர்களையோ தலைவராகத் தெரிந்தெடுத்து சகல ஊர்களிலும் பிரச்சார நபர்களைச் சேர்த்து சகலரும் பாடுபட்டால் உண்மையில் நமது பத்திரிகைகள் முன்னேற்றமடைந்து நாம் கோரிய காரியம் சித்தியாகும் என்பது என் தாழ்மையான அபிப்ராயம் என்பதை சகல கிறீஸ்துவ சகோதரர்களுக்கும் எனது சிரம்பணிந்து சமர்ப்பிக்கிறேன். இதைப்பற்றி சகலரும் அறியும்படி தங்கள் தங்கள் பரிபூரண மனதைச் சகல கத்தோலிக்குப் பத்திரிகைகளிலும் வெளியிடவேண்டுமாய் மன்றாடிநிற்கும்,

M. மரியண்ணன்,
கோயமுத்தூர்.

OUR EMPLOYMENT BUREAU

The unemployed trained teachers who are willing to work in the Perambalur Range, Trichy District, may send in their applications to the Deputy Inspector of Schools, Perambalur Range. Vacancies are in about 25 Schools in that range.

எலிமெண்டரி பாடசாலைகளுக்கு ஏற்ற சங்கீத பாட புத்தகங்கள்.

1. பாலசங்கீத வாசகம்

முதல் 3 வகுப்பு மாணவர்களுக்கு ... 0—4—6

2. பாலசங்கீத வாசகம்

ஆசிரியர்களுக்கு ... 0—6—6

3. கர்னாடக சங்கீத போதினி

(முதல்பாகம்) ஆசிரியர்களுக்கு ... 0—6—0

4. கர்னாடக சங்கீத போதினி (2-ம் பாகம்)

1 முதல் 5 வகுப்பு கிறிஸ்துவ மாணவர்களுக்கு ... 0—6—0

5. கர்னாடக சங்கீத போதினி (3-ம் பாகம்)

6 முதல் 8 வகுப்பு கிறிஸ்துவ மாணவர்களுக்கு ... 0—6—0

விலாசம்: **A. GNANADICKAM,**
South Indian Music School,
St. Thomas Church Rd.,
OOTACAMUND.

எமது "போதனாவிஷயப் பூங்கொத்து" பத்திரிகை ஏற்கனவே இல்லாத இடங்களிலும், ஆசிரியர் சங்கங்களிலும் விற்பனைசெய்ய ஏஜெண்டுகள் தேவை. கமிஷன் தாராளம். விபரத்திற்கு பத்திராதிபருக்கு எழுதவும்.

பத்திராதிபர்.

மரித்தவர்களை மறவாதிருக்க ஞாபகச்சின்னம்!



பாலிஷ் கற்களில் எழுத்துக்களோடு தங்கள் இஷ்டத்திற்கு சிலுவைகள் பிளான்படி வேலை செய்து அனுப்பப் படும். எமது வேலைப்பாடுகளைப் பாராட்டி சங். கனம். கொலெ சுவாமி அவர்களும், ஆங்கிலேய, தமிழ் கன தனவான்களும் எமக்கு அநேக நற் சாக்ஷி பத்திரங்களும் தங்க மெடல் களும் பரிசளித்திருக்கிறார்கள். மாதா சிலைகளும், கத்தோலிக்கு தேவாலய பலிபீடங்களும், பிரான்ஸ், இத்தாலி தேசங்களின் வேலைப்பாடுகளுக்கு சமத்துவமாக குறைந்த செலவில் திருப்திகரமாக செய்து கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு: M. I. துமரசாமி அன் சன்ஸ், கருங்கல் பாலிஷ் வியாபாரிகள், மேட்டுத் தெரு, உறையூர், திருச்சிறுப்பள்ளி.

சிறுவர் அறிவுக் கதிர்

ESTD 1935

CHILDREN'S MAGAZINE

சிறுவர்களுக்கேற்ற சிறந்த மாதப் பத்திரிகை
வருட சந்தா உள்நாடு 12 அணா வெளிநாடு ¼ ரூ
டிபாஸிட் கட்டும் ஏஜண்டுகள் எங்கும் தேவை
சிறுவர் அறிவுக்கதிர் ஆபீஸ் ஈரோடு, S.I.RY.

"ஆரம்பக்கல்வி"

சுமார் 5 வருட காலமாக ஆரம்ப ஆசிரியர்களின் முன்னேற்றத் துக்கு உழைத்துவரும் ஓர் மாதாந்தரப் பத்திரிகை.

இதில் பாடசாலைகள் சம்பந்தமான அரசாங்க உத்தரவுகள், டைரெக்டர் சுற்றறிக்கைகள், கெஜட்டில் பிரசுரமாகும் கல்வி சம்பந்த மான செய்திகள், ஆசிரியர்களுக்கு மிக்க உபயோகமான பொதுச் செய்திகள், கட்டுரைகள் வெளிவரும்.

வருட சந்தா ரூ. 1—0—0. மாதிரிப் பிரதி இனாம்.

ஆரம்பக்கல்வி ஆபீஸ், 94, 95, புதுத்தெருவு, மண்ணடி, மதராஸ்.

Reg. No. M. 1354.

THOMAS SPORTS

[Pro: I. PONNIAH PILLAI]

CLIVE'S HOUSE, TEPPAKULAM P. O.,

TRICHINOPOLY



OFFICIAL STOCKISTS FOR

SLAZENGER'S Ltd.

LONDON.

The CHEAPEST HOUSE FOR

Spalding Australian Dunlop American Fulcrum & Japan

TENNIS FRAMES

WE UNDERTAKE

RE-STRINGING REPAIRING
RE-SHAPING & REGLUEING

WE MANUFACTURE THE BEST & GUARANTEED

NETS, BADMINTON BALLS IN ANY COLOUR IN ANY WEIGHT

A TRIAL IS SOLICITED

Your best Selection may be made at our Show Room.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Superintendent, St. Joseph's Industrial School Press, Trichinopoly.